மாஜிஸ்டிரேட்டுகளாக இருப்பதால் வழக்குரைஞர்கள் அவர்களிடம் வழக்கு களைப்பற்றி எடுத்துரைப்பதில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, சட்டம் படித்தவர்களையும், பதவிகளிலிருந்து ஓய்வு பெற்ற வழக்குரைஞர்களை யும் நீதிபதிகளையும் கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளாக நியமிக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டம் படிக்காதவர்கள் ஆனரரி மாஜிஸ்டிரேட்டுகளாக இருப்பதில் சங்கடங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. சட்டம் படிக்காதவர்களாக இருந்தாலும் அனுபவம் பெற்றவர்கள் இந்த பதவிக்குத் தகுதிபெற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆனால் சட்டம் படித்தவர்களும், வழக்குரைஞர்கள், நீதிபதிகள் பதவிகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் இருந்தால் அவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். உதாரணமாக திருச்சி மாவட்டத்தில் பல ஆண்டுகளாக ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர் ஆனரரி மாஜிஸ்டிரேட்டாகப் பணியாற்றியிருக்கிறார். அப்படிப்பட்ட வர்கள் இல்லாத இடங்களில் மற்றவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

Magistrates under suspension

*422 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of (i) Sub-Judges (ii) District and Sessions Judges and (iii) Sub-Magistrates, who are now under suspension;

(*b*) the period for which they are under suspension; and

(*c*) the steps taken to clear their cases soon?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) துணை நீதிபதி அல்லது மாவட்ட நீதிபதி எவரும் பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட வில்லை. சப்-மாஜிஸ்டிரேட் ஒருவர் 26—10—1970-லிருந்தும் கூட்டு முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் ஒருவர் 30—1—1971-லிருந்தும் பதவியிலிருந்து தற் காலிகமாக நீக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

(உ) சப்-மாஜிஸ்டிரேட்டைப் பொறுத்தவரை விசாரணை அதிகாரியின் (மாவட்ட நீதிபதி, மதுரை) அறிக்கை, உயர்நீதி மன்றத்திற்கு இன்னும் கிடைக்கவில்லை. கூட்டு முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டை பொறுத்தமட்டில், சேலம் கூட்டு மாவட்ட நீதிபதி விசாரணை நடத்தியதன் பேரில் அவர் தெரிவித்த முடிவுகள் உயர்நீதி மன்றத்தின் ஆய்வில் உள்ளன.

1973 மார்ச் 19]

திரு. என். டென்னிஸ் : குறுகிய காலத்திற்குள் இதுபோன்ற வழக்குகளில் ஒரு முடிவினை எடுக்க வேண்டும் என்பதனை அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த முயற்சிகளை உயர்நீதிமன்றம் எடுத்துள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஒரு ஜில்லா மாஜிஸ்டிரேட் சஸ்பெண்டு செய்யப்பட்டு 3 வருடமாகிறது. இன்னமும் அந்த வழக்கில் ஒரு முடிவு தெரிவிக்கப்படாது காலதாமதம் ஆகிறதே, இதுபோன்ற வழக்குகளில் ஒரு வருடத்திற்குள் முடிவினைத் தெரிவிக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீண்டகாலம் சஸ்பென்ஷனில் வைக்கக் கூடாது என்பதுதான் அரசின் உத்தேசம். அந்த அடிப்படையில் இதுபோன்ற வழக்குகளில் விரைவாகத் தீர்ப்பினைக் கூற நடவடிக்கைகள் உருவாகும்.

ராமநதி அணைக்கட்டுத் தொழிலாளர்களுக்கு 'திட்டப்படி'

*423 வினா—**திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடனா நதி, ராமநதி அணைக்கட்டுத் தொழிலாளிகள் ப்ராஜக்ட் அலவன்ஸ் கோரி அம்பாசமுத்திரம் அலுவலகத்தின் முன்பு 1972 ஏப்ரல் மாதத்தில் உண்ணாவிரதம் இருந்தது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) 15—4—1972 அன்று முதல் நான்கு தொழிலாளிகள் 'திட்டப்படி' (Project allowance) அரசு விரைவில் வழங்குமாறு கோரி உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தனர். பின்னர் 27—4—1972 அன்று போராட்டக்குழு அணைக்கட்டுத் தொழிலாளர் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின் பேரில் உண்ணாவிரதத்தை நிறுத்துவது என்று முடிவு செய்து 28—4—1972 அன்று காலை உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.